செ.வெ.எண். 40

நாள். 23.1.2020

ந.க.பி2.24288/2019

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
நீலகிரி மாவட்டம், உதகமண்டலம்.
நாள் : 23 .01.2020.

# பத்திரிக்கை செய்தி

குடியரசு தின விழாவை முன்னிட்டு வருகிற 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு உதகை அரசு கலைக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் தேசியகொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் **திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப.,** அவர்கள் கலந்து கொண்டு இந்திய தேசிய கொடியினை ஏற்றி வைத்து, காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ள உள்ளார். பின்னர், சுதந்திர போராட்ட தியாகிகளை கௌரவித்தல், பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், மாணவ-மாணவியர்கள் மற்றும் பழங்குடியினர் நடத்தும் கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெற உள்ளது. பொது மக்கள் அனைவரும் குடியரசு தின விழா நிகழ்ச்சிகளில் திரளாக வந்து கலந்து கொண்டு சிறப்பிப்பதோடு, நீலகிரி மாவட்டத்தை பிளாஸ்டிக் இல்லாத மாவட்டமாக முழுமையாக மாற்றவும், சுற்றுப்புற சூழலை பாதுகாக்கவும், இயற்கை அழகினை பேணவும் எடுக்கும் முயற்சிகளுக்கு மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு தரவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-எஸ்.நிர்மலா,
மாவட்ட வருவாய் அலுவலர்,
நீலகிரி மாவட்டம்.

/ உ.ந.உ.ப. /

23/01/2020

2/20

மாவட்ட வருவாய் அலுவலருக்காக,
நீலகிரி மாவட்டம்

23/01/2020